# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## இரண்டாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
## Second Term Examination – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| சைவநெறி | 22 | T | I, II | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் Index No

## சைவநெறி

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. "தனக்கு மேல் தலைவன் இல்லை" என்னும் பொருள்படக் கணபதிக்கு வழங்கும் பெயர்.
   1.ஐங்கரன் 2 விநாயகர் 3. லம்போதரர் 4. வக்கிரதுண்டர்

2. "அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாராயிரம் நாட்டல்…" என ஒப்புரவு பற்றிக் குறிப்பிட்டவர்
   1. திருவள்ளுவர் 2. திருமூலர் 3. பாரதியார் 4. நாவலர்

3. ஒரு இராசி எனக் கொள்ளப்படுவது
   1. $2\frac{1}{4}$ நட்சத்திரங்களின் தொகுதி 2. $3\frac{1}{4}$ நட்சத்திரங்களின் தொகுதி
   3. $2\frac{1}{2}$ நட்சத்திரங்களின் தொகுதி 4. $\frac{1}{2}$ நட்சத்திரங்களின் தொகுதி

4. திருக்கார்த்திகை விளக்கீடு சிறப்பாக மேற்கொள்ளப்படும் அக்கினித்தலம்
   1. திருச்செந்தூர் 2. திருத்தணிகை 3. திருவண்ணாமலை 4. திருப்பனந்தாள்

5. உயிர்களது மும்மலங்களையும் நீக்குவதனால் திருநீறு அழைக்கப்படுவது
   1. ஷாரம் 2. பஸ்மம் 3. இரட்சை 4. பசிதம்

6. சீதை மேல் காமமுற்று அங்கசேட்டை செய்தவன்
   1. இந்திரன் 2. சயந்தன் 3. சாம்பன் 4. வீரபாகு

7. ஆலாலசுந்தரருக்கு பசித்துன்பம் போக்க இறைவன் பொதிச்சோறும் தண்ணீரும் வழங்கி அருளியபோது பாடிய பாடல்
   1. "தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்…"
   2. "நீள நினைந்தடியேன்…."
   3. "பிழையுளன பொறுத்திடுவீர்…."
   4. "இத்தனையுமாற்றை அறிந்திலேன்….."

8. "கொற்றவன் குடி முதலியார்" என அழைக்கப்பட்ட சந்தானகுரவர்
   1. மெய்கண்டதேவர் 2. உமாபதி சிவாச்சாரியார்
   3. அருணந்தி சிவாச்சாரியார் 4. மறைஞானசம்பந்தர்



kalvi.lk

9. பக்தி அனுபவப் பூரிப்பைச் சுட்டும் 51 பாடல்களின் தொகுப்பாய் அமைந்த முருகக்கடவுளின் சிறப்பு நூல்
   1. கந்தரலங்காரம் 2. கந்தரந்தாதி 3. வேல்விருத்தம் 4. கந்தரநுபூதி

10. "வசன நடை கைவந்த வல்லாளர்.." எனச்சிறப்பிக்கப்படுபவர்
   1. பாரதியார் 2. நாவலர் 3. விபுலானந்தர் 4. விவேகானந்தர்

11. முத்தியின்பத்திற்கு வழிவகுக்கும் வினை
   1. ஆகாமிய வினை 2. சஞ்சித வினை 3. பிரார்த்த வினை 4. பற்றற்ற வினை

12. "சத்தியம் வத, தர்மம் சர" என வாய்மை சிறப்பைக் குறிப்பிடும் நூல்
   1. புராணம் 2. வேதம் 3. ஆகமம் 4. உபநிடதம்

13. "தமிழ்" பக்தியின் மொழி" என சிறப்பிக்கப்படும் நூல்
   1. திருவாசகம் 2. திருக்குறள்
   3. திருமந்திரம் 4. நாலாயிரம் திவ்ய பிரபந்தம்

14. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கை வார்ச் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்..." என சங்கம வழிபாட்டின் சிறப்பை எடுத்தியம்பியவர்
   1. ஆளுடைய பிள்ளை 2. ஆளுடைய அரசு 3. ஆளுடைய அடிகள் 4. ஆளுடைய நம்பி

15. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என தருமச் செயல் பற்றிக்குறிப்பிடும் நூல்
   1. திருமந்திரம் 2. ஆத்திசூடி 3. மணிமேகலை 4. திருக்குறள்

16. தேரோட்டம் எனச் சிறப்பிக்கப்படுவதும் திருச்சூகர வேட்டை இடம்பெறும் ஆலயம்
   1. கழுதாவளைப்பிள்ளையார் ஆலயம்
   2. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
   3. புன்னைச்சோலை பத்திரகாளி ஆலயம்
   4. திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி ஆலயம்

17. அண்மைக்காலத்திலே ஸ்ரீசத்தியபாமா ருக்மணி சமேத பார்த்த சாரதி கோயிலாக மாற்றம் பெற்ற திரௌபதி அம்மன் ஆலயம்
   1. உடப்பு திரௌபதி அம்மன் ஆலயம்
   2. காரைதீவு திரௌபதி அம்மன் ஆலயம்
   3. பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயம்
   4. புதூர் திரௌபதியம்மன் ஆலயம்

18. திருமணக்கிரியைகளில் இரட்சா பந்தணம் எனப்படுவது
   1. கன்னிகாதானம் 2. கணையாழி எடுத்தல் 3. காப்புக்கட்டுதல் 4. பிதிர் ஆசீர்வாதம்

19. நாட்டார் தெய்வங்களில் ஒன்றாகிய வைரவப் பெருமானுக்குரிய விரத நாட்கள்
   1. பங்குனி உத்தரம், ஆடிப்பரணி 2. வைகாசி விசாகம், ஆடிப்பூரம்
   3. ஆவணி ஞாயிறு, பங்குனித் திங்கள் 4. சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி

20. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தோற்றுவித்தவர்
   1. உமாபதி சிவாச்சாரியார் 2. ஆறுமுக நாவலர் 3. நமசிவாய தேசிகர் 4. மெய்கண்டர்

21. முருகப் பெருமானின் கையிலுள்ள வேலாயுதம் இறைவனின்
   1. இச்சா சக்தி 2. கிரியா சக்தி 3. அர்த்த சக்தி 4. ஞான சக்தி



kalvi.lk

22. குலப்பண்டிகை எனச் சிறப்பிக்கப்படும் விரதம் அனுட்டிக்கப்படும் தினம்
   1. ஆவணிமாத பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமை
   2. மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரம்
   3. புரட்டாதி மாத தேய்பிறை சனிக்கிழமை
   4. ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமை

23. பெரியபுராணத்தின் காப்பிய நாயகன்
   1. சுந்தரர் 2. சிவன் 3. சேக்கிழார் 4. விஸ்ணு

24. அருணகிரிநாதரைச் சாவிலிருந்து தடுத்த முருகப்பெருமான் வடிவைக்கூறும் நூல்
   1. வேல்விருத்தம் 2. கந்தபுராணம் 3. கந்தரலங்காரம் 4. திருவகுப்பு

25. சைவசித்தாந்த நூல்களுக்கெல்லாம் மூலமானது.
   1. சிவஞானபோதம் 2.திருவுந்தியார்
   3. கொடிக்கவி 4. சிவஞானசித்தியார்.

26. சித்தாமிர்த புட்கரணியை தீர்த்தச் சிறப்பாகக் கொண்ட ஆலயம்
   1. திருகோணமலை துர்க்கையம்மன் ஆலயம்
   2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
   3. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
   4. மட்டக்களப்பு ஸ்ரீ பத்திரகாளிஅம்மன் ஆலயம்

27. விரதமகிமை கூறும் சைவ இலக்கியங்கள்
   1. திருக்கரசைப்புராணம், கல்வளையந்தாதி, மறைசையந்தாதி
   2. கண்ணகிவழக்குரைகாதை, காத்தவராயன் கூத்து, காமன் கூத்து
   3. தட்சணகைலாயபுராணம், கைலாயமாலை, பறாளைவிநாயகர்பள்ளு
   4. பிள்ளையார்கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம்

28. மகோற்சவக்கிரியையில் சூர்ணோற்சவம் உணர்த்தும் தத்துவம்
   1. படைத்தல் 2. மறைத்தல் 3. அருளல் 4. அழித்தல்

29. தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான்" எனும் பாடல் இடம் பெறும் நூல்
   1. திருவருட்பயன் 2. பராபரக்கண்ணி 3. திருமாலை 4. பொய்யாமொழி

30. திருநாவுக்கரச நாயனாருக்கு குருதீட்சை அளித்தவர்
   1. புனிதவதியார் 2. திலகவதியார் 3. சிவபெருமான் 4. முருகப் பெருமான்

31. "பச்சை மாமலை போல் மேனி.." எனும் பாடலில் போற்றப்படும் தெய்வம்
   1. சிவபெருமான் 2. விநாயகர் 3. சக்தி 4. விஸ்ணு

32. ஆகந்துக மலம் எனக்குறிப்பிடப்படுவது
   1. ஆணவம் 2. கன்மம்
   3. மாயை 4. அதேகாமாயை

33. குங்குலியக்கலயநாயனார் சரிந்த சிவலிங்கத்தை நிமிர்த்திய தலமாகக் கூறப்படுவது
   1. திருக்கடவூர் 2. திருமழபாடி
   3. திருவாவினன் குடி 4. திருப்பனந்தாள்

34. 'பட்டகட்டையிற் பகற்குருடு போகின்றது' இதில் பட்டகட்டை, பகற்குருடு முறையே
   1. சப்பறம், உமாபதி சிவாச்சாரியார் 2. பல்லக்கு, உமாபதி சிவம்
   3. பல்லக்கு, மெய்கண்டார் 4. மஞ்சம், மறைஞான சம்பந்தர்



kalvi.lk

35. உரும்பிராயில் இயங்கி வந்த பெண்பிள்ளைகளுக்கான கருணை இல்லத்தை இன்றும் பொறுப்பேற்று நடாத்திவரும் நிறுவனம்

1. சைவவித்தியாவிருத்திச் சங்கம்
2. சைவபரிபாலன சபை
3. இந்து மாமன்றம்
4. நல்லை ஆதீனம்

❖ **36 – 39 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி விடையை தெரிவு செய்க**

| | | |
|---|---|---|
| A – கந்த புராணம் | B – கொடிக்கவி | C – சைவதூஷண பரிகாரம் |
| D – மதங்கசூளாமணி | E – கண்டனநூல் | F – சித்தாந்த அட்டகம் |
| G – மீட்சிப்படலம் | H – நாடகநூல் | I – விபுலானந்தர் |
| J – நாவலர் பெருமான் | K – உமாபதி சிவம் | L – கச்சியப்பர் |

36. சைவசித்தாந்தக்கருத்துக்களுடன் தொடர்புடைய தொகுதி

1. B, E, L 2. A, F, K 3. C, E, J 4. B, F, K

37. ஆறு காண்டங்களுடைய நூலுடன் தொடர்புடைய தொகுதி

1. A, F, L 2. C, G, L 3. A, G, L 4. D, F, I

38. ‘‘உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது’’ எனக்குறிப்பிட்டவருடன் தொடர்புடைய தொகுதி

1. D, H, I 2. D, E, I 3. C, H, I 4. C, F, J

39. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ சமய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவருடன் தொடர்புடைய தொகுதி

1. D, E, J 2. C, E, J 3. B, G, I 4. C, F, I

40. மனிதனும் தெய்வமாகலாம் என்பதற்கு வேண்டியவை

1. கல்வியும் செல்வமும்.
2. ஈகையும் இரக்கமும்
3. நேர்மையும் கடமையும்
4. புகழும் பெருமையும்

(40 X 1 = 40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி – II

❖ **முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடைதருக

1. சைவ சாதனங்கள் எவை?
2. மகாளயபட்சம் எனப்படுவது யாது?
3. இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் எவை?
4. திருவாதவூரருக்கு இறைவன் செய்த அருட்செயல்கள் எவை?
5. சித்தாந்த அட்டகத்துள் அடங்கும் நூல்கள் நான்கு தருக.
6. “ஆணவ மலம் இருளிலும் கொடியது” என ஏன் குறிப்பிடப்படுகின்றது?
7. நாட்டார்கலைகளாக கருதப்படுபவை எவை?
8. பிரதிஷ்டா கிரியை நிகழ்த்துபவர் கொண்டிருக்கும் ஆசாரிய இலட்சணங்கள் எவை?
9. ஆலாலசுந்தரர் செய்த அற்புதங்கள் இரண்டைக்குறிப்பிடுக.
10. அந்தக்கரணங்கள் நான்கையும் குறிப்பிடுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

02. பின்வரும் திருப்பாடல்களில் இரண்டைத் தெரிவு செய்து வரிக்கிரமமாக எழுதுக. பொழிப்புரையையும் எழுதுக

1. "தனம் தரும் கல்வி தரும் ...."
2. "சிந்திக்கிலேன் நின்று..."
3. "பச்சைமா மலைபோல் மேனி...."
4. "மீளாஅடிமை..."
5. "கற்றவர் விழுங்கும்..."

((3 + 2)x2=10 புள்ளிகள்)

03. **"அன்பு நெறியில் சைவத்தை வளர்த்தவர்கள் நாயன்மார்கள், அறிவுநெறியில் வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள்".**

1. வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதிய நூல் எது? அவர் நின்ற, மார்க்கம், முத்தி என்பவற்றைத் தருக.
2. சந்தானகுரவர் என்பதன் பொருள் யாது? அகச்சந்தானகுரவர்களின் பெயர்களைத் தருக.
3. சகலாகம பண்டிதரால் அருளப்பட்ட நூல்கள் எவை? அவற்றின் சிறப்பபுக்களைத் தருக

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

04. **"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"**

1. ஆலயத்தில் நிகழ்த்தப்படும் கிரியைகள் எவை?
2. கும்பாபிசேகம் என்பதன் மறு பெயர்களைக் குறிப்பிட்டு காரணத்தைத் தருக.
3. பிரதிஷ்டையின் நான்கு வகைகளும் எவை? அவற்றை விளக்குக.

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

05. **"திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க என்றி யொருமலத்தா ராயு முளர்"**

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? அதனை அருளியவர் யார்?
2. மூவகை ஆன்மாக்களையும் அவை பீடிக்கப்பட்டுள்ள மலங்களையும் தருக.
3. மூலமலமாகிய ஆணவ மலத்தின் இயல்புகள் எவை?
4. இறைவனின் திருவருட்சக்தி எப்போது கிட்டும்?

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்)

06. **"சைவ மக்களின் வாழ்க்கையோடு சடங்குகள் பின்னிப் பிணைந்துள்ளன"**

1. பூர்வக்கிரியைகள் நான்கு தருக.
2. இறந்தவர்களின் உடலுக்கு வீட்டில் செய்யப்படும் கிரியைகள் எவை?
3. அந்தியேட்டி என்பதன் பொருள் யாது? அது எப்போது எவ்வாறு மேற் கொள்ளப்படும்?

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. விநாயகர் சஷ்டி விரதம்
2. திருமூலர்
3. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்
4. ஆகமங்கள்

(2 x 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk